[2014 ஜூலை 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 299, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

299—

ஆரம்ப சுகாதார நிலையம்

*__49907—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:__

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடகுத்து ஊராட்சி, இந்திரா நகரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

இந்திரா நகர் கிராமம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தினுடைய மக்கள்தொகை சுமார் 2,40,696 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கு ஏற்ப ஏற்கெனவே அங்கு செயல்பட்டுவரும் 9 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக இருக்கின்ற காரணத்தினாலும், விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தினாலும் இந்திரா நகர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் யுகங்கள் ஆனாலும், அம்மா என்ற அமுத சொல் அழிந்துவிடாது; (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை யுகங்களானாலும், தாயே தங்களின் மகத்தான மக்கள் நலத் திட்டங்கள் மறைந்துவிடாது என்னும் அளவிற்கு மாட்சிமை*

2014 ஜூலை 31]

மிகுந்த நல்லாட்சி வழங்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, இந்திரா நகர் மற்றும் வடகுத்து ஊராட்சியில் அமைந்துள்ள இந்திரா நகர் என்ற வளர்ந்துவரும் நகரம் விக்கிரவாண்டி-கும்பகோணம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்த இரண்டு ஊராட்சிகளிலும் சுமார் 25,036 ஆண்களும், 23,779 பெண்களும் என மொத்தம் 48,817 பேர் வசிக்கின்றார்கள். இது வளர்ந்து வரும் நகரம். தானே புயலால் பாதிக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலமாக இச்சாலை நான்கு வழிச் சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, இந்தப் பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதி மக்கட்தொகை அடிப்படையிலும், குறைந்தபட்ச இடைவெளி தூரம் என்ற அடிப்படையிலும் விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து துறைரீதியாக உரிய ஆய்வு நடத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]